1967 ஜூன் 23]

வேறு ஏதாவது தொழிற்சாலை ஆரம்பிக்க இயலுமா, அதற்கு வழி இருக்கிறதா என்பதைப்பற்றி உறுப்பினர் அவர்களும் சொன்னால் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கலாம்.

*** 56. வினா:—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் சிமெண்ட் பாக்டரி ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழக அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழகத் தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷன் லிமிடெட் என்கிற கம்பெனி இராமநாதபுரம் மாவட்டம் ஆலங்குளத்தில் சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றை நிறுவி வருகிறது.

மு. ப. 9–

திரு. முனு. அதி : தலைவர் அவர்களே, சிமெண்டு தொழிற்சாலையில் உற்பத்தி ஆகின்ற அத்தனை மூட்டைகளையும் விநியோகம் செய்யும் உரிமை மாநில சர்க்காருக்கா அல்லது மத்திய சர்க்காருக்கா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மூலக் கேள்விக்கும் இந்த உப கேள்விக்கும் தொடர்பு இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு சிமெண்டு தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும் என்று நீண்ட நெடுங்காலமாக கோரிக்கை இருந்து வருகிறது. அதற்கு ஏற்பாடு ஆகிவருகிறது என்று சொன்னாலும், இன்னும் ஆரம்பிப்பதற்கு எவ்வளவு நாட்கள் ஆகும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதற்குத் தேவைப்படுகிற அடிப்படை வேலைகள், அதாவது இடம் வாங்குவது பெரும்பாலும் முடிவடைந்துவிட்டது. மெஷீன்கள் ஆர்டர் செய்யப்பட்டிருக்கின்றன. அவை வந்து சேர்ந்ததும் ஆரம்பிக்கப்படும். நாள் ஒன்றுக்கு 1,600 டன் உற்பத்தி செய்யக்கூடிய திட்டமாக அது அமையும். ஒட்டுமொத்தமாக அதற்கு ரூ. 6 கோடி ஆகக்கூடும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. மெட்ராஸ் ஸ்டேட் இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்டு கார்ப்பரேஷன் லிமிடெட் இதனுடைய முழுப் பொறுப்பையும் ஏற்று நடத்த இருக்கிறது.

திரு. நா. காசிராமன் : தஞ்சாவூர் ஜில்லாவில் இதுபோன்ற சிமெண்டு தொழிற்சாலைகளை சிறிய அளவிலாவது ஆரம்பிப்பதற்கு சாத்தியக்கூறுகள் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் நேற்று முன்பு எடுத்துச் சொன்னது போல, இதற்கு மூலப்பொருளான சுண்ணாம்பு கற்கள் தேவைப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் வேண்டிய அளவு இந்த மூலப்பொருள் கிடைக்குமானால் அதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயலாம்.

திரு. கரு. சீமைச்சாமி : கிழக்கு இராமநாதபுரத்தில் இராமேசுவரம் தீவில் சிமெண்டு தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு அது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அங்கே ராமசுப்பிரமணியம், ராதாவுக்கு அனுமதி வழங்கப்பட்டது என்ன நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி விவரம் இல்லை. தனிக்கேள்வி வேண்டும்.

திரு. கே. சகாதேவ கண்டர் : புதிதாக ஆரம்பிக்கும் 9 தொழிற்சாலைகள் தனியார் துறையிலா, கூட்டுறவுத் துறையிலா, அரசாங்கத் துறையிலா என்பதைத் தெரிந்துகொள்ள ஆவல் படுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதலில் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது அரசாங்கத் துறையிலே இராமநாதபுரம் பக்கத்தில் ஆலங்குளத்தில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என்று சொன்னேன். மற்றவைகள் சிறிய தொழிற்சாலைகள் தனியார் துறைக்கு விடப்பட்டிருக்கின்றன.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : வள்ளூரில் ஒரு சிமெண்டு தொழிற்சாலை தனியார் துறையில் ஆரம்பிப்பதற்கு லைசென்ஸ் வழங்கப்பட்டது. அவர்கள் அதை ஏற்று நடத்தவில்லை. அரசாங்கமே அதை ஏற்று நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வள்ளூரில் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு லைசென்ஸ், அனுமதி வழங்கப்பட்டது. இப்பொழுது இந்திய அரசு சிமெண்டு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு, லைசென்ஸ் தேவையில்லை என்று ரத்து செய்திருக்கிறது. யார் வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம்.

திரு. எம். சுரேந்திரன் : மைலாரில் சுண்ணாம்புக் கற்கள் கிடைக்கின்றன. ஆகவே, அங்கு சிமெண்டு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி விவரம் கொடுத்தால் ஆராயப்படும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தஞ்சை மாவட்டத்துப் பக்கத்தில் திருச்சி மாவட்டத்தை ஒட்டி ஆலங்குடியில் சுண்ணாம்புக் கற்கள் மிக அதிகமாகக் கிடைக்கின்றன. அதைப்பற்றி பரிசீலனை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி விவரம் தந்தால், ஆராய்வதற்கு முயற்சி செய்யலாம்.

[1967 ஜூன் 23

திரு. கரு. சீமைச்சாமி : கிழக்கு இராமநாதபுரத்தில் இராமேசுவரம் தீவில் ஒரு சிமெண்டு தொழிற்சாலை ஆரம்பிப்பதாகச் சொல்லப்பட்டு, மறுபடியும் அது மற்ற ஜில்லாக்களுக்குப் போய் விடுகிறது. கிழக்கு இராமநாதபுரத்தில் இராமேசுவரம் தீவில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் இனிமேலாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றிய விவரம் என்னிடம் இல்லை. தனியாக விவரத்தை எழுதி அனுப்பினால் ஆராய்ந்து என்ன செய்யலாம் என்று முடிவு செயயலாம்.

சிதம்பரம்—நடராசபுரம் சாலை

*57 வின.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூக்காவில், சிதம்பரம்—நடராஜபுரம், போகும் ரோட்டில் சிதம்பரநாதன் பேட்டை அருகிலுள்ள கலுங்கு மதகு பஸ் போக்குவரத்துக்கு அதிக இடைஞ்சலாக குறுகி இருப்பதனால் அதை இடித்துவிட்டு விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) பரிசீலிக்கப்படும்.

(இ) பரிசீலனை முடிந்ததும் வேலை மேற்கொள்ள முயற்சி எடுக்கப்படும்.

தமிழ்நாட்டில் வறட்சிப் பகுதிகள்

*58 திரு. கரு. சீமைச்சாமி :
திரு. ஆ. துரையரசன் : } மதிப்பிற்குரிய உணவு
திரு. வி. கே. கோதண்டராமன் :
வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு வறட்சிப் பகுதிகளை பார்வையிட குழு ஏதேனும் நியமித்ததா?

(இ) ஆம் என்றால், அக்குழுவின் அறிக்கை சபை முன் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) ஆய்வுக்குழுவின் அறிக்கை இன்னும் முடிவு பெறவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தை பற்றி எல்லா அமைச்சர்களுக்கும் தெரியும். அது மானாவாரி பிரதேசம், வறட்சிப் பிரதேசம். நல்ல செழிப்புள்ள மாவட்டங்களாகிய தஞ்சை, கோவை போன்ற இடங்களில்தான் கிணறுகள் வெட்டுவது, மானியங்கள் கொடுப்பது போன்ற உதவிகள், மற்றக் காரியங்கள் செய்யப்படுகின்றன. பிற்பட்ட மாவட்டமாகிய